சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 13.02.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **122/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-7 |
| சாட்சியின் பெயர் | : | கார்த்திகன் |
| தந்தை பெயர் | : | செல்வராஜ் |
| கிராமம் | : | திருப்பயத்தாங்குடி |
| தாலுக்கா | : | நாகப்பட்டிணம் |
| தொழில் | : | தீயணைப்பு அதிகாரி |
| வயது | : | 54 |

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 4 எதிரிகள் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். தற்போது திருவாரூர் தீயணைப்பு மற்றும் மீட்பு பணி நிலையத்தில் நான் தீயணைப்பு நிலைய அலுவலர் போக்குவரத்தாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.06.2025 ம் தேதியன்று இரவு 09.00 மணியளவில் நான் நிலைய

அலவலகத்தில் இருந்தபோது, எங்கள் அலுவலகத்திற்கு மணக்கால் அய்யம்பேட்டை கிராம்தில் புலவநல்லூர் என்ற இடத்தில் ஒரு வீடு தீப்பற்றி எரிவதாக தகவல் கிடைத்தது. உடனடியாக தீயணைப்பு வண்டியுடன் எனது தலைமையில் மேற்படி கிராமத்திற்கு சென்றோம். அங்கு 20 அடி அகலம் 30 அடி நீளம் உள்ள கூரை வீட்டின் ஒரு பகுதி தீப்பிடித்து எரிந்து முடியும் தருவாயில் இருந்தது. அங்கு நாங்கள் செல்வதற்குள் ஊர் மக்கள் பெரும்பாண்மையான தீயை அனைத்திருந்தார்கள். நாங்கள் அங்கு மேலும் தீ பரவாமல் இருப்பதற்கும், ஏற்கனவே சிறிது எரிந்து கொண்டிருந்த அந்த வீட்டில் முழுமையாக தண்ணீர் ஊற்றி அனைத்தோம். அந்த இடத்தில் இருந்த நபர்களை விசாரித்தபோது, ஆசைத்தம்பி என்பவருடைய வீடு என்று என்னிடம் தெரிவித்தார்கள். மேலும் காவல் நிலையம் சென்று புகார் கொடுக்கப்போவதாகவும் சொன்னார்கள். நான் அதை பதிவு செய்து விட்டு, நிலையம் திரும்பினேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** : இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.02.13 13:20:04 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.